

தாராபுரம் சட்டமன்ற தொகுதி கழக வெற்றி வேட்பாளர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து கழக மகளிர் அணி, மகளிர் தொண்டரணி ஆலோசனைக்கூட்டம் திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் இல.பத்மநாபன் தலைமையில் கழக மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் ப.ராணி வரவேற்புரையில், கழக மகளிர் தொண்டரணி இணை செயலாளர், முன்னாள் அமைச்சர் தமிழரசி ரவிக்குமார், கழக மகளிர் அணி துணைச் செயலாளர்கள் முன்னாள் அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், ரேகா பிரியதர்ஷினி, சத்யா பழனிக்குமார், செ.உமாமகேஸ்வரி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் மு. பெசாமிநாதன் கலந்து கொண்டு ஆலோசனை களை வழங்கினார். இதில் பிரபாவதி பெரியசாமி, எஸ்.முருகானந்தம், எம்.பழனியாண்டி உள்பட மாவட்ட, ஒன்றிய, நகர மகளிர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### பல்வேறு மாவட்ட அரசு மருத்துவமனைகளில் தட்டுப்பாடு!

# குழந்தைகளின் உயிர்காக்கும் மருந்து கிடைப்பதை உறுதி செய்க!

## கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. வலியுறுத்தல்!

சென்னை, செப். 25-

பல்வேறு மாவட்ட அரசு மருத்துவமனைகளில் பச்சிளம் குழந்தைகளின் உயிர்காக்கும் மருந்துகள் கிடைப்பதில் தட்டுப்பாடு நிலவுவதாக செய்திகள் வருகின்றன. அரசு உரிய நடவடிக்கை எடுத்து மருந்து கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. வலியுறுள்ளார்.

இது குறித்து கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. ட்விட்டரில் விடுத்துள்ள பதிவு வருமாறு:



சென்னை, தேனி, தருமபுரி, திருப்பூர், கடலூர், திருவண்ணாமலை, வேலூர், கரூர் உள்ளிட்ட தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளில் பச்சிளம் குழந்தைகளின் உயிர்காக்கும் மருந்துகள் கிடைப்பதில் தட்டுப்பாடு நிலவுவதாகச் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

பிறந்த பச்சிளம் குழந்தைகளுக்கு மிகவும் அடிப்படைத் தேவையான உயிர்காக்கும் மருந்துகளை வழங்க முடியாமல் என்ன செய்துகொண்டிருக்கிறது சுகாதாரத் துறை?

இளம்பிஞ்சுகளின் விரலில் மோதிரம் மாட்டி விளம்பரம் தேடத் துடிக்கும் அக்கறையைக் குழந்தைகளின் உயிர்களைக் காப்பதில் கொஞ்சமாவது காட்ட வேண்டாமா?

குழந்தைகளுக்கான மருந்துகள் தட்டுப்பாடின்றிக் கிடைப்பதை தமிழ்நாடு அரசு உடனே உறுதி செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### மின்சாரம் இல்லை, மின் கட்டணக் கொள்ளை! பால் விலை உயர்வு!

# குடிக்க தண்ணீர் இல்லை! குடிநீர் வழங்கல் துறை தனியாருக்கு தாரை வார்ப்பு!

## த.வெ.க. அரசின் அவலம்! சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கண்டனம்!

நெல்லை.செப்.25-

சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு த.வெ.க.ஆட்சி அமைய வாக்களித்த மக்கள் படும் துன்பம் குறித்து தனது எக்ஸ் வலைதளப் பதிவில் கூறியிருப்பதாவது.



த.வெ.க. ஆட்சி அமைய வாக்களித்த மக்கள் படும் துன்பம் மின்சாரம் இல்லை! மின் கட்டணக் கொள்ளை,ஆவின் பால் கிடைப்பதில்லை! பால் விலை உயர்வு, குடிக்க தண்ணீர் இல்லை! குடிநீர் வழங்கல் துறை தனியார்க்கு தாரை வார்ப்பு, பரந்தூர் விமான நிலையம் ரத்து! சென்னை விமான நிலையம் பல கோடிக்கு அதானிக்கு விற்பனை.

தமிழ்நாட்டின் கனிம வளங்கள் ஆந்திரா ரெட்டி கேங்கிடம் பல கோடிக்கு விற்பனை, தமிழ்நாட்டில் ஓட்டுனர் நடத்துனர்களுக்கு வேலை இல்லை! வட மாநிலத்தவர்க்கு வேலை விற்பனை இது தான் உங்கள் ஆட்சியின் லெட்சணமா CMsir ?

ஊழலற்ற ஆட்சி என்று தம்பட்டம் அடிக்கும் முதல்வரே ஆட்சி அமைக்க ஆதரவளித்த M.L.A.களுக்கு பல நூறு கோடி ரூபாய் எங்கிருந்து வந்தது CMsir?

தி.மு.க.ஆட்சியில் கஜானா காலி 10 லட்சம் கோடி ரூபாய் கடன் என்று குற்றம் சாட்டும் முதல்வரே! உங்களுக்கு மக்கள் வரிப்பணத்தில் பல கோடி ரூபாய் சொகுசு அறை ஒரு கேடா ? காவேரிக்கு தண்ணீர் வாங்க துப்பில்லாத முதல்வரே! மேட்டூர் அணை திறக்க மக்கள் வரிப்பணத்தில் ரூபாய் 6 கோடி ஆடம்பர செலவு தேவையா? இத்தனையும் செய்து கொண்டே புனிதர், புத்தர், காந்தி ஆட்சி என்று சொல்லிக்கொள்ள வெட்கமா இல்லையா CMsir?

சினிமாவில் மீனவ நண்பன்! நிஜத்தில் குமரி மாவட்ட மீனவ கிராமங்களில் கனிம வளம் எடுக்க கார்ப்பரேட்டுகளுக்கு அனுமதி,தமிழக மீனவர்களுக்கு எதிராக ஒன்றிய அரசு கொண்டு வந்த “சாகர் மாலா” திட்டத்திற்கு ஆதரவு! தமிழக மீனவர்கள் சுருக்குமடி செல்ல அனுமதி மறுப்பு, கம்பராமாயணத்தில் சீதை மாயமான் கேட்டது போல், பட்டினப்பாக்கத்தில் புதிய சட்ட மன்றம் யாருக்காக CMsir?

இவ்வாறு அவர் தனது எக்ஸ் வலைதள பதிவில் கூறியுள்ளார்.



தாராபுரம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து மூலனூர் கிழக்கு ஒன்றியம், எரசினாம்பாளையம் ஊராட்சி பாகம் எண் 286ல் மொடக்குறிச்சி மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் சு.குணசேகரன், தெற்கு ஒன்றிய செயலாளர் ஆர்.விஜயகுமார்ஆகியோர் தலைமையில், அவல்பூந்துறை பேரூர் கழகச் செயலாளர் சாமியப்பன் (எ) சண்முகசுந்தரம், அரச்சலூர் பேரூர் கழக செயலாளர் கோவிந்தசாமி ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், ஈரோடு தெற்கு மாவட்ட, மாநகர, பகுதி கழக மகளிர் அணியினர், தகவல் தொழில்நுட்ப அணியினர் பலர் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தனர்.





நாள் : 25.09.2026 வெள்ளிக்கிழமை நேரம் : மாலை 6.00 மணி

இடம் : பிரசாத் கலர் லேப், சாலிகிராமம், வடபழனி, சென்னை

முன்னிலை :

திருமிகு. திருச்சி.N.சிவா M.P. அவர்கள்

தி.மு.க துணை பொதுச்செயலாளர்

மிசா வடுக்கள் தொகுப்பு நூல் வெளியீட்டாளர் :

ஆசிரியர் திரு. கி.வீரமணி அவர்கள்

தலைவர், திராவிடர் கழகம்

முதல் பிரதி பெற்றுக்கொள்பவர் :

திரு. கே.பாலகிருஷ்ணன் அவர்கள்

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி

தி மிசா மார்க் ஆவணப்படம் வெளியீடு :

திரு. என்.ராம் அவர்கள்

இந்து பத்திரிகை குழுமம்

சிறப்பு அழைப்பாளர்கள் :

திரு. சுப.வீரபாண்டியன் அவர்கள் திரு. தோழர் தியாகு அவர்கள்

திரு. T.K.S.இளங்கோவன் Ex.MP அவர்கள்

தி.மு.க செய்தி தொடர்பாளர்